செ.வெ.எண்.63 நாள்:24.04.2017

பத்திரிக்கை செய்தி ___ திருநெல்வேலி மாவட்டம்

# திருநெல்வேலி மாவட்டத்தில் 30 வங்கிகள் மூலம் 60 கிராம ஊராட்சிகள் தத்தெடுக்கப்பட்டு சீமை கருவேல மரங்கள் வேருடன் அகற்றும் பணிகள் நடைபெறவுள்ளது.

## சங்கரன்கோவில் ஒன்றியம் அரியநாயகிபுரம் ஊராட்சியில் பஞ்சாப் நேஷனல் வங்கியின் மூலம் சிமைகருவேல மரம் அகற்றும் பணிகளை தொடங்கி வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்.

-----

திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவில் ஒன்றியம் அரியநாயகிபுரம் ஊராட்சி கே.எம்.அச்சம்பட்டியில் பஞ்சாப் நேஷனல் வங்கியின் மூலம் பெரிய நிறுவனங்களின் சமூக பொறுப்பு திட்டத்தின் கீழ் சீமைகருவேல மரங்கள் அகற்றும் பணிகள் தொடக்க விழா இன்று (24.04.2017) நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் கலந்து கொண்டு தெற்கு குலையன் பாறைகுளத்தில் JCB இயந்திரங்கள் மூலம் சீமைக்கருவேல மரங்கள் வேருடன் அழிக்கும் பணிகளை தொடங்கி வைத்தார். மேலும் சீமைகருவேல மரங்களின் தீமைகள் தொடர்பான துண்டு பிரசுரங்களை வெளியிட்டு விவசாயிகளுக்கும், பொது மக்களுக்கும் வழங்கினார்.

இவ்விழாவில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது:-

சீமை கருவேல மரங்களினால் நிலத்தடி நீர்மட்டம் குறைதல், காற்றில் உள்ள ஈரப் பதம் குறைதல் உள்ளிட்ட பல்வேறு தீமைகள் உள்ளதால் மாண்பமை உயர்நீதிமன்றம் சீமைகருவேல மரங்களை வேருடன் அழிக்க உத்தரவிட்டுள்ளது. இதனடிப்படையில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் சீமைகருவேல மரங்கள் வேருடன் அழிக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் லாப நோக்கமின்றி வங்கிகள் பொது மக்களுக்கு முதியோர் உதவித் தொகை வழங்குதல், தேசிய ஊரக வேலை உறுதித்திட்ட பணியாளர்களுக்கு சம்பளம் வழங்கும் பணிகள் உட்பட பல பணிகளை செய்து வருகின்றன. சீமைகருவேல மரம் ஒழிப்பு பணிகளில் வாங்கிகளும் ஈடுபடும் வகையில் 30 வங்கிகளுக்கு தல 2 கிராம ஊராட்சிகள் வீதம் 60 கிராம ஊராட்சிகள் ஒதுக்கீடு செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு இன்று பஞ்சாப் நேஷனல் வங்கி முன்வந்து இப்பகுதியில் உள்ள தெற்கு குலையன் பாறைகுளம் பகுதியில் உள்ள 45 ஏக்கர் பரப்பிலும், கிராம நிர்வாக அலுவலர் மூலம் பட்டியல் பெறப்பட்டு அப்பகுதியிலும் சீமை கருவேல மரங்களை வேருடன் அழிக்க நடவடிக்கை எடுத்துள்ளது. தரிசு நிலங்களில் தான் சீமை கருவேல மரம் வளர்ந்துள்ளது. விவசாயிகள் தங்கள் நிலங்களை தரிசாக போடமால் உழுது ஏதேனும் பயிர் செய்திட வேண்டும். பயிரை உடனடியாக காப்பிட்டு

செய்வதன் மூலம் பாதிக்கப்பட்டால் நிவாரணம் பெறலாம். விவசாயிகள் தங்கள் நிலங்களில் உள்ள கருவேல மரங்களை முற்றிலும் அழிக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். திருநெல்வேலி மாவட்டத்தில் கருவேல மரங்களை முற்றிலும் அகற்றும் வரை நடவடிக்கைகள் தொடரும் எனப் பேசினார்.

இக்கூட்டத்தில் தென்காசி வருவாய் கோட்டாட்சியர் திரு.வெங்கடேஷ், மாவட்ட முதன்மை வங்கி மேலாளர் திரு.அழகர்சாமி, கடையநல்லூர் வட்டாட்சியர் திரு.மாரியப்பன், பஞ்சாப் நேஷனல் வங்கி பெரியசாமியபுரம் கிளை மேலாளர் திரு.தனசேகர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.சக்தி அனுபமா, திரு.ஜனார்தனன் மற்றும் விவசாயிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம் திருநெல்வேலி.